**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

| | | |
|---|---|---|
| Case Number | | CC No. 40 /2022 |
| Deposition of witness | | PW- 5 /LW- 7 |
| Name | | திரு. மதியழகன்(உதவி ஆய்வாளர்) |
| Father's/Husband Name | | திரு. சுக்கிரன் |
| Village | | பட்டுக்கோட்டை |
| Taluk | | பட்டுக்கோட்டை |
| Age | | 58/2025 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 30th day of October 2025**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் செல்வி.கு.பரமேஸ்வரி, bench clerk Gr-3 என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**

<u>**முதல் விசாரணை**</u>

நான் தற்போது தஞ்சாவூர் சிறப்பு நுண்ணறிவு பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு அதிராம்பட்டிணம் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது கடந்த 31.08.2019 காலை 8.30 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருந்தபோது அ.சா.1 மஸ்கான் கனி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண் 180/2019, ச/பி 294(b), 448, 323, 324, 506(ii) IPC பிரிவுகளின் படி வழக்கு பதிவு செய்தேன். நான் பெற்ற புகார் மனு **அசாஆ.4** ஆகும். நான் பதிந்த முதல் தகவல் அறிக்கை **அசாஆ.5** ஆகும். பின்பு வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு 31.08.2019 காலை 9.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மாரிமுத்து, தனகுமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்தேன்.

அந்த பார்வை மகசர் **அசாஆ6** மற்றும் மாதிரிவரைப்படம் **அசாஆ7** ஆகும். பின்பு பார்வை மகசர் சாட்சிகள் மாரிமுத்து, தனகுமார் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு சம்பவ சாட்சிகள் ரிலாவூதின், ஜாவித்அகமத் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு அதிராம்பட்டிணம் அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு சிகிச்சையில் இருந்த அ.சா.1 மஸ்தான்கனி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி சாட்சிகள் சம்பவத்தைப்பற்றி தெளிவாகவும் விளக்கமாகவும் என் வாக்குமூலத்தில் உள்ளபடி கூறினார்கள்.

மேற்படி சாட்சிகளின் வாக்குமூலங்களிலிருந்தும், புலன் விசாரணையிலிருந்தும், வழக்கு சம்பவம் உண்மை என்பது தெரிய வந்ததால் எதிரிகளை கைது செய்ய தேடியபோது எதிரிகள் தஞ்சை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றதால் கைது நடவடிக்கை மேற்கொள்ளபடவில்லை. பின்பு என் முதல்கட்ட விசாரணை முடித்து மேல் விசாரணைக்கு உதவி ஆய்வாளர் ஜார்ஜ் ராஜா பார்வைக்கு வைத்தேன். உதவி ஆய்வாளர் ஜார்ஜ் ராஜா அவர்களுடன் நான் பணிபுரிந்ததால் அவர்களுடைய கையெழுத்தும் கையொப்பமும் நன்கு தெரியும் என்பதால் ஆவணங்களை பார்த்து அவருக்காகவும் சாட்சியம் அளிக்கிறேன். உதவி ஆய்வாளர் ஜார்ஜ் ராஜா வழக்கை மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வை இட்டததில் நான் தயார் செய்தது போல் சம்பவ இடம் இருந்ததால் தனியாக பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைப்படம் தயார் செய்யவில்லை. பின்னர் சம்பவ சாட்சிகளை தனியாக விசாரித்தபோது என்னிடம் சொல்லியதையே அவரிடமும் சொல்லியதால் அவர் தனியாக வாக்குமூலம் எதுவும் தயார் செய்யவில்லை.

பின்பு காயம்பட்ட அசா1க்கு சிகிச்சை அளித்த அதிராம்பட்டிணம் அரசு மருத்துவமனை மருத்துவர் சீனிவாசன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேட்டு நகல் பெற்றுள்ளார். மேற்படி மருத்துவர் காயம்பட்ட

அசா1க்கு சிகிச்சையில் இருந்து தானாக சென்று விட்டபடியால் காயத்தின் தன்மை குறித்து சான்று வழங்க இயலாது என குறிப்பிட்டுள்ளார். அவர் வழங்கிய விபத்து பதிவேட்டு நகல் **அ.சா.ஆ.8** ஆகும். இறுதியாக உதவி ஆய்வாளர் ஜார்ஜ் ராஜா இந்த வழக்கு விசாரணையை முடித்து எதிரிகள் மீது ச/பி 294(b), 448, 323, 324, 506(ii) IPC பிரிவுகள் படி 12.10.2019 அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

வாதியிடம் தவறான தகவலை பெற்று பொய்யாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை இல்லை</u>**

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஒம்/– திரு.த.சுதர்சன்.,எம்.ஏ.,எல்.எல்.பி.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை